**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். Crl.M.P. 298 /2025**
**வழக்கு சாட்சி. ம.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | தமிழரசன் | **வயது** | : | 55 /2026 |
| **தந்தை பெயர்** | : | குருசாமி | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | அறந்தாங்கி | **தொழில்** | : | |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**<u>தேதி : 16.02.2026</u>**

மனுதாரர் தரப்பு 3 ஆவது சாட்சி தமிழரசன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி Tmt.Sahanathirushya, Grade–III Bench clerk, என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**SWORN STATEMENT:**

நான் மேற்படி முகவரியில் வசித்து வந்து 2021 முதல் அறந்தாங்கி வர்த்தக சங்கத்தில் இன்று வரை மேலாளராக பொறுப்பில் இருந்து வருகிறேன். கடந்த 2021–2024 வரையிலான காலக்கட்டத்தில் 1 கோடிக்கு மேல் பணப்பரிமாற்றம் நடைபெற்றுள்ளது. 2025 இல் புதிய தலைவர் திரு. தங்கதுரை அவர்கள் பொறுப்பேற்ற பின்பு புதிய தலைவருக்கு, மின்னஞ்சல் மூலமாக பழைய பொறுப்பில் இருந்த நிர்வாகிகள் 2021–2024 வரையிலான வரவுசெலவு கணக்குகளை அனுப்பி வைத்தனர். பின்பு புதிய தலைவர் பொறுப்பேற்ற பின்பு மேற்படி 2021–20245 வரவு செலவு கணக்குகளை ஆய்வு மேற்கொண்ட போது அதில் சுமார் ரூ.14,10,101 வரை முறைகேடு நடந்தது கண்டு பிடிக்கப்பட்டது. பின்பு மேற்படி முறைகேடுகளை கண்டறிவதற்காக நிர்வாக கமிட்டி அமைத்து ஆய்வு செய்தார்கள். மேற்படி நிர்வாக கமிட்டி ஆய்வு மேற்கண்ட பொழுது மேற்படி முறைகேடானது நடைபெற்றது உறுதி செய்யப்பட்டது. மேற்படி முறைகேடு குறித்து தணிக்கை அலுவலரிடம் கொடுத்து சரிபார்க்கப்பட்டது. அப்பொழுதுதான் முறைகேடு நடந்திருப்பது தணிக்கையில் தெரியவந்தது. பின்பு சங்கத்தின் புதிய தலைவர் மேற்படி முறைகேடுகள் குறித்து பழைய நிர்வாகிகளுக்கு எழுத்து பூர்வமான அறிவிப்பு கொடுத்தார். அதனை பெற்றுக்கொண்ட பழைய நிர்வாகிகள் முறையான பதில் ஏதும் அளிக்கவில்லை. பின்பு மீண்டும் முறைகேடுகள் தகவல் அளித்தும் முறையான பதில் இல்லை. பின்பு புகார்தாரரால் அறந்தாங்கி காவல் துணை காண்பாணிப்பாளர் அறந்தாங்கி, வருவாய் கோட்டாச்சியர் அறந்தாங்கி, புதுக்கோட்டை காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனு தொடர்பாக இதுநாள் வரை நடவடிக்கை எடுக்கவில்லை. பின்பு

புகார்தாரர், எதிர்மனுதாரர் மீது நீதிமன்றத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**மறுவிசாரணை:**
இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஓம்/−எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**